# ஜாமக்காரன்
# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15


VOLUME - 5 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 10
OCTOBER 2021 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்கள் யாவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்



தொடர்ந்து உங்களோடு தொடர்பு கொள்வதில் எனக்கு மிகவும் சந்தோஷம். **நானும்** என் **மனைவியும்** நாட்களை எண்ணிக்கொண்டு **கர்த்தரைகான ஆவலாய் இருக்கிறோம்.** ஆண்டவர் எங்களுக்கு ஆரோக்கியத்தை கொடுத்து **ஆயுளையும் நீட்டிக்கொண்டே** போகிறார். எங்கள் இருவரில் **யார் முந்திக்கொள்வோம்** என்பதை நாங்கள் சிரித்துக்கொண்டே அடிக்கடி பேசிக்கொள்வோம்.

ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் அனுபவித்த, அனுபவித்துக்கொண்டிருக்கிற **ஆவிக்குரிய சந்தோஷத்தை** நினைத்து நினைத்து கர்த்தரை துதிக்கிறோம்.

அலை அலையாய் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து கொண்டிருக்கும் உயிருக்கு ஆபத்தான கிருமிகள் மிக வேகமாக பரவிக்கொண்டிருக்கும் இச்சூழலில் வாசகர்களுக்கு இன்னும் என்னவெல்லாம் ஆலோசனை கூறமுடியுமோ அவைகளை ஞாபகப்படுத்தி ஞாபகப்படுத்தி எழுதி அறிவித்துக்கொண்டிருக்கிறேன்.

என் பத்திரிகையில் **மற்றவர்கள் எழுதும் செய்திகளையும்** எழுதி

வெளியிடுகிறேன். **காரணம் ஒன்று** எனக்கு நேரம் போதவில்லை, கூடுதாலாக எழுத நேரம் இல்லை. நான் எழுதியதுபோக மீதியுள்ள இடத்தை நிறப்பி அந்தந்த மாத பத்திரிகையை பூர்த்தி செய்து அனுப்புவது. மற்றவர்களின் கருத்துக்கும் நான் எழுதுவதற்கும் வித்தியாசமாக இருக்கலாம். ஆனால் ஜாமக்காரனில் நான் குறிப்பிடாத பல நன்மையான செய்திகள் என் வாசகர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதும் மற்றொரு காரணமாகும்.

## மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.

☐ இம்மாதம் குறிப்பாக உங்களுக்கு அறிவிக்க நான் ஆசைப்படுவது இன்றைய காலங்களில் **You-tube பிரசங்கங்கள்** எக்கச்சக்கமாக ஈசல் புற்றுபோல் பெருகிவிட்டது. ஜாக்கிறதை !

அதில் பிரசங்கிப்பவர்கள் ஒரு **வசனத்துக்கு** விதவிதமான **சொந்த வியாக்கியானங் களை** கொடுக்கிறார்கள், இதில் ஆண்களுக்கு போட்டியாக ஏராளமான **பெண்கள்** இஷ்டம்போல் பிரசங்கிக்கிறார்கள், எப்படிதான் மக்கள் அவைகளை கேட்கிறார்களோ? மற்றொரு பக்கம் **TVசேனல்களிலும்** பெண் **பிரசங்கிமார்களின்** எண்ணிக்கை பெருகிப்போனது.

தயவுசெய்து You-tubeல் சரியான பிரசங்கத்தை தெரிந்தெடுத்து அவைகளை கவணியுங்கள். பிரசங்கிப்பவர்கள் வசனத்தை விட்டு விலகுகிறார்களா? என்பதை கவணித்து பிழையாக இருந்தால் அந்த குறிப்பிட்ட You-tube பார்ப்பதை நிறுத்துங்கள்.

கிறிஸ்தவ **TV சேனல்களை பார்ப்பதிலும்** எச்சரிக்கையாக இருங்கள். **ஏஞ்சல்** TV முதலாளி நடத்தும் Tea with Ayya என்ற நிகழ்ச்சி 24 மணி நேரமும் நடைபெருகிறதா என்று சந்தேகம் எழுகிறது. இதில் சில **வாலிப பெண்களுடன்** சாது மட்டும் அவர்கள் மீது உராய்வதைபோல நெருங்கி உட்கார்ந்து அவர்களை இடித்துக்கொண்டே பேசுவது. அவர்கள் பேசுவது பிரயோஜனமில்லாத செய்தியாக இருந்தாலும் மணிக்கணக்காக அமர்ந்து வடையையும் நன்றாக தின்றுகொண்டே அவர் சொல்லும் **கற்பனைக்கதை** இருக்கிறதே, அதற்கும் ஆமாம்சாமி போட்டு கேட்டும் ஆட்கள் தெண்டத்துக்கு அங்கு சாது உடன் அமர்ந்து ஒரு டீக்காக சாது அவர்களோடு உட்கார்ந்து கேட்பது அவர்களுக்கும் சலிப்பு ஏற்பட்டு நெளிந்துகொண்டே அமர்ந்திருப்பதை காண முடிகிறது. இந்த **பொய் சாதுவிடமிருந்து** எப்போது காப்பாற்றப்படுவோம் என்று அவர்கள் உள்ளத்தில் ஜெபித்து கொண்டிருக்கலாம். இதை வாசிப்பவர்கள் யாரும் உப்பு சப்பு இல்லாத அந்த நிகழ்ச்சியை தயவு செய்து பார்க்காதிருங்கள்.

மற்றொரு பக்கம் ஆவிக்குரியவர்கள் நடத்தும் நல்லநிகழ்ச்சிகள், You-tubeலும் வருகிறது. ஒன்று இரண்டு பிரசங்கங்கள் நல்ல ஆவிக்குரிய வேத வசன அடிப்படையில் இருக்கிறது. அப்படி வசன அடிப்படையில் பிரசங்கிக்கும் நல்ல பாஸ்டர்கள் நடத்தும் ஆராதனையை You-tube

சேனலில் பாருங்கள் அதிலும் பிசாசு **மாயையை** உள்ளே நுழைத்துவிடுகிறான். ஜாக்கிறதை

இந்த லாக்டவுன் சமயத்தில் 81 வயதை கடந்த நாங்கள் சபைக்கும் போகாமல் வேறு எங்கும் போகாமல் வேறு வழியின்றி குறிப்பிட்ட சில TV சேனலை மட்டும் அல்லது You-tubeஐ மட்டும் பார்க்கிறோம்.

## மாயையை பின்பற்றுகிறவர்களுக்கு ஜாக்கிறதை

கடந்த இரண்டு வருடமாக நானும் என் மனைவியும் தொடர்ந்து பார்க்கும் You-tube **ஆவடியில்** உள்ள **ACA சபையின்** பாஸ்டர் **காப்ரியேல் தாமஸ்** அவர்களின் செய்திகள்தான். ஒவ்வொரு முறையும் புது புது செய்தியை தயாரித்து தன் சபை மக்களுக்கு பிரசங்கிக்கிறார், அவர் ஒரு நல்ல மேய்ப்பனாக திகழ்கிறார். பாராட்டுகிறேன்.

பாஸ்டர் அவர்களை இளம் **வாலிப பிராயத்திலேயே** கேள்விப்பட்டிருக்கிறேன். நான் (சென்னை) தாம்பரம் **சேலையூர்** CSI ஆலயத்தில் கன்வென்ஷனில் பிரசங்கிக்க வந்தபோது வெகு அருகே உள்ள **கிறிஸ்தவ கல்லூரி** மாணவ மாணவிகள் கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள். அவர்களிடம் பேசும்போது **காப்ரியேல்** என்பவர் ஆவடியிலிருந்து வந்து கூட்டம் நடத்தியதில் நாங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்பார்கள். அன்று **ஏஞ்ஜல்** TVயில் பாஸ்டர் **காபிரியேல்** அவர்களின் பிரசங்கம் வாராவாரம் வெளிவரும். அநேகர் அதை கண்டு புகழ்ந்து கூறுவதைகேட்டு நானும் இரண்டு முறை TVயில் அவரின் செய்தி கேட்டேன். பலரால் விருப்பப்படுகிற நல்ல செய்திகள் ஏஞ்ஜல் TVமுதலாளி சாது செல்வராஜ்க்கு பிடிக்காதே. ஆகவே அவர் பாஸ்டர் கேபிரியேல் பிரசங்கத்தை என்ன காரணத்தினாலோ நிறுத்திவிட்டார் என்று கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட நல்ல **பிரசங்க** தாலந்தும், **பாடும்** தாலந்தும் உள்ள அவரை அவரின் தம்பி பிரச்சனை விஷயமாக நேரில் விசாரிக்க **ஆவடிக்கு** அவர் வீட்டுக்கு சென்றேன். அவர் துணைவியார் என்னை உபசரித்தார். தம்பி காபிரியேலும் வந்து என்னை கண்டார். அதிக நேரம் பேச முடியவில்லை. நானும் ரயிலுக்கு புறப்பட வேண்டியிருந்ததால் நாம் வேரு ஒரு நாளில் சாவகாசமாக பேசுவோம் என்று கூறி உடனே புறப்பட்டுவிட்டேன். அதன்பின் பாஸ்டர் காபிரியேலை நேரில் காணும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் இப்போது கொரோனா கிருமி அந்த வாய்ப்பை கொடுத்தது. கொரோனா காரணமாகவும் என் வயது 81ஐ தாண்டியதின் காரணமாகவும் வீட்டைவிட்டு வெளியே போகாமல் வீட்டில் இரண்டு வருடமாக முடங்கி கிடக்க வேண்டியதானது. அப்போதுதான் You-tube ல் **ஆவடி சபை** செய்தியைப் பற்றி என் மனைவி கூறினார். அதிலிருந்து ஆவடி சபை ஆராதனையில் மட்டும் You-tube வழியாக கலந்து கொண்டோம்.

தம்பி காபிரியேல் சிறு வயதிலேயே வேதத்தை ஆராய்வதில் தேர்ந்தவர். நிறைய புஸ்தகங்கள் படிப்பார் என்பதை அவர் சபையில் உள்ளஎன் ஜாமக்காரன் வாசகர்கள் மூலமாக

கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட நல்ல வேத பண்டிதராகிய இவர் மற்ற **பெந்தேகோஸ்தே சபையிலிருந்து** வித்தியாசமானவராக காணப்பட்டார்.

ஆனால் ஒரு நாள் நவம்பர் மாதம் ஞாயிறு 8-30 மணி காலை ஆராதனையில் அவர் பிரசங்கம் முடித்தவுடன் சபை மக்களை எழுந்திருக்க சொல்லி இப்போது தலைமை பாஸ்டரும் என் அப்பாவுமான பாஸடர் தாமஸ் அவர்களுக்கு தொண்டை ஆப்பரேஷனுக்காக கூட்டிப்போகிறோம். சபை மக்கள் யாவரும் **அன்னிய பாஷையில்** பாஸ்டரின் சுகத்துக்காக இணைந்து ஜெபிப்போம் என்றார். அப்போதே அவரும் மற்ற பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களைப் போல் **சபை மக்களுக்கு** தவறான **ஜெபத்தை சொல்லித் தருகிறா**ர் என்று விளங்கிவிட்டது.

வேத புத்தகத்தை பலமுறை வாசித்து தெளிவு பெற்ற இவருக்கு வேதத்தில் யாராவது **அன்னிய பாஷையில்** ஜெபித்திருக்கிறார்களா? **அன்னிய பாஷையில்** ஜெபித்தால் சுகம் கிடைக்குமா? இது கள்ள உபதேசம் அல்லவா ? என்பதை குறித்து ஏன் உணராமல் இருக்கறாரோ ?

**அன்னிய பாஷை** என்பது ஒரு வரம் ஆகும் - அது பரிசுத்த ஆவியின் **அடையாளம் அல்ல.** பாஸ்டர் **அன்னிய பஷையில்** பேசுங்கள் என்றால் **சபை மக்கள் பேசுகிறார்கள்**. **<u>நிறுத்துங்க</u>**ள் என்றால் **<u>பாஷையும் நின்று போகிறது</u>**. என்ன இது ?

பாஸ்டர் கேபிரியேல் அவர்களும் ஜெபத்தில் **<u>ஷங்கர தபஷலா</u>** என்று என்னமோ ஒரே ஒரு நிமிடம் **<u>உளருகிறார்</u>**. உடனே சபை ஜனங்களும் அதை காப்பி அடித்து அதே மாதிரி **<u>உளர முயலுகிறார்கள்.</u>**

சபை மக்களை **பரவச <u>நிலைக்கு</u>** கொண்டுபோக எல்லா சாதாரண பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களின் **யுக்தியை** இவரும் உபயோகிக்கிறார். **<u>உற்சாகப்படுத்தும்</u>** ஒரு பாடலை தெரிந்தெடுத்து அதை **வேகமாக பாட** வைக்கிறார்.வேகமாக அந்த பாட்டை பாடப்பாட அவர்களுக்குள் இனம்புரியாத **பரவசம்** உண்டாகிறது. கூடவே **ஜெபத்தில்** வேக வேகமாக **<u>கைகளை தட்ட வேண்டும்.</u>** அந்த **உடல் அசைவும்,** பாடல் வேகத்துக்கு உதவிசெய்து **பரவச <u>நிலைக்கு</u>** சபை மக்களை கொண்டு போகிறது. சபையின் பின்னால் நின்று ஜெபிக்கும் சில சகோதரிகள் **ஜெபத்தில் கூவுகிறார்கள். மிகச் சப்தமாக கதருகிறார்கள்.** இப்படிப்பட்ட கூத்துக்களை நான் **சிலோன் பெந்தேகோஸ்தே** (TPM) சபைகளில் கண்டிருக்கிறேன்.

அங்கேயிருந்துதான் இவர்கள் இவைகளை கற்றுக்கொண்டதால் அதையே இவருடைய அப்பா காலத்திலிருந்து ஆவடி சபையில் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இவருடைய ACA சபையில்தான் மற்ற சபைகளைவிட **செய்திகள் கேட்கும்படியாகவும்**. நாம் **வசனத்தில் வளரும்படியாகவும்** இருக்கிறது என்று நினைத்து

உலகமெங்கும் உள்ள என் வாசகர்களுக்கு **ஆவடி சப**ை You-tube பாருங்கள் என்று சிபாரிசு செய்தேன். ஆனால் அப்பா சுகம் பெற **அன்னிய பாஷையில்** ஜெபியுங்கள் என்று கூறியதை நான் கண்டபோதே சோர்ந்து போனேன்.

**அன்னிய பாஷை** என்ற **மாயையை** இவர்கள் இன்னும் புரிந்துகொள்ளாமல இருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம். இவர்கள் **கையில்** உள்ள **வேத புத்தகத்தை** மொழி பெயர்த்து தந்த சீகன்ஸ்பல்க், வில்லியம்கேரி மற்றும் **இரத்த சாட்சியாய் மரித்த** பரிசுத்தவான்கள் யாரும் **அன்னிய பாஷை** பேசவில்லையே ! என்பதைகூட இந்த **பாஸ்டர்மார்** ஏன் யோசிக்க முயற்சி செய்யவில்லை, **ஸ்தேவான்** மரிக்கும் கடைசி நேரத்தில் **விசேஷ ஆவியால் நிறைந்து அன்னிய பாஷையில்** பேசாமல் இயேசுவை பரலோகத்தில் நிற்பதை பார்த்து என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன் என்றார், ஸ்தேவான் **பரலோக பாஷையிலா** பேசினார். **எபிரேய** பாஷையில்தானே பேசினார்.

நான் இப்படி எழுதுவதால் **என் வாசகர்கள்** அல்லது **ஆவ**டி சபையினர் ACA சபையை விட்டு போகாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய சூழ்நிலையில் இவர்கள் **செய்திகள் வசன அடிப்படையில்** உள்ளதால் அந்த **சபையிலேயே** இருந்து **உங்கள் ஆத்துமாவை** ஜாக்கிறதையாக பார்த்துக்கொள்ளுங்கள். அவர்கள் **அன்னிய பாஷையி**ல் உளரட்டும். அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவேண்டாம். ஆனால் நீங்கள் அவர்களைப்போல் **அன்னிய பாஷையில் பேச முயற்சி செய்யாதபடி** அதை உதாசீனம் செய்து உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

இவர்கள் பேசும் – அன்னிய பாஷை **ஒரு மாயை** – அதை பின்பற்ற வேண்டாம்

இப்படி நான் அந்த சபையை பற்றி எழுதினாலும் நாங்களும் தொடர்ந்து அந்த **சபை ஆராதனையில்தான்** கலந்துகொள்வோம். கர்த்தர் தாமே உங்கள் அனைவருக்கும் **ஆவியை பகுத்தரியும் ஞானத்**தை அருளவாராக. பாஸ்டர் காபிரியேலுக்கும் தான் பேசுவது **அன்னிய பாஷை அல்ல** என்பது **மிக நன்றாக தெரியும்** என்பதில் சந்தேகம் இல்லை.

கர்த்தர் தாமே நாம் எல்லாரையும் ஆசீர்வதிப்பாராக.

☐ நீங்கள் அனுப்பிய எல்லா காணிக்கைகளும் கிடைக்கப்பெற்றேன்.

☐ நீங்கள் அனுப்பிய **ஜெப குறிப்புகளுக்காகவும்** தொடர்ந்து ஜெபிக்கிறேன். ஜெபத்தில் **நன்மை பெற்றவர்கள்** எழுதிய கடிதமும் கிடைத்தது. **தொலைபேசி** வழியாக **கர்த்தர் ஜெபத்தை கேட்டார்** என்றும் கர்த்தர் **பதில் அளித்தார்** என்றும் போனில் கூறும்போதே உடனே நான் **போனிலேயே** பதில் கொடுத்த **கர்த்தருக்கு ஸ்தோத்திர ஜெபத்தை**யும் பேசியவர்களோடு சேர்ந்து ஏறேடுத்தேன். தொடர்ந்து நீங்களும் ஜெபியுங்கள்.

டாக்டர் **புஷ்பராஜ்**

**ஜாமக்காரன் :** இப்போதுள்ள அனைத்து சபைகளும் ஆவிக்குரிய வல்லமையை முழுதுமாக இழந்து இருக்கிறது இக்கால கட்டத்துக்கு இநத செய்தி பிரயேஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

# திருச்சபை இழந்த வல்லமையை மீண்டும் பெறுதல்

வண. டாக்டர் வுட்ரோ குரோல்

முதலாம் நூற்றாண்டில் சபை சிறியதாய் இருந்தாலும் **வல்லமையுடையதாய்** இருந்தது. அதே வல்லமையுடைய சபையை இன்று நாம் காண முடியுமா?

**இயேசு கிறிஸ்துவின்** ஊழியத்தின் நிறைவையும் **பரிசுத்த ஆவியானவரின்** வருகையையும், **சபையின் தோற்றம்** பவுலின் ஊழியம், அவர் பிரயாணங்களையும் வேதாகமத்தில் காண்கிறோம். **ஆதி திருச்சபையின்** வல்லமையை இப்போதுள்ள சபைகள் மீண்டும் பெற்றுக்கொள்ள நாம் செய்யவேண்டிய காரியங்களை அப்போஸ்தலருடைய நடபடி புத்தகத்திற்கூடாக நாம் அறிந்துகொள்ளமுடியும்.

## 1. மன்னிப்பு – ஸ்தேவான்

அப்போஸ்தலர் 7ம் அதிகாரம் இரத்தசாட்சியாக மரித்த ஸ்தேவானைப்பற்றி கூறுகிறது. **ஆதி சபையின் வல்லமை அதனிடத்தில் காணப்பட்ட மன்னிப்பாகும்.** இது ரோம சாம்ராஜ்யத்தையும் யூதமக்களையும் **அநேக காரியங்களுக்காக மன்னிக்க வேண்டி இருந்தது,** ஏனெனில் **அங்கிருந்தசபை மக்கள் தங்களது விசுவாசத்திற்காக அதிகமான துன்பத்தை அனுபவித்தனர்.** குறிப்பாக முதல் இரத்த சாட்சியான **ஸ்தேவானைப்போல** துன்புற்ற நபர்கள் **மன்னிப்பதை** அற்பமான காரியமாக எண்ணாமல் இயேசுவைப்போல நடந்து கொள்ள வேண்டியிருந்தது.

**தீர்க்கதரிசிகளையும்** பழைய ஏற்பாட்டு **தேவனுடைய தீர்க்கர்கள்** கூறிய செய்திகளையும் அலட்சியம் செய்யாதீர்கள். இப்போதோ நீதிபரராகிய ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்துவையும் நீங்கள்தான் கொலை செய்துவிட்டீர்கள் என்று **ஸ்தேவான் கூறியதைக் கேட்ட** யூதர்கள் மகா மூர்க்கமடைந்தனர், அவனைப் பார்த்துப் **பல்லைக் கடித்தார்கள்.**

ஆனால் ஸ்தேவானோ வானத்தை அண்ணாந்து பார்த்து அங்கு **இயேசு நிற்பதைக் கண்டார்.** பரிசுத்த ஆவியினாலே நிறைந்தார். தேவனுடைய மகிமையைக் கண்டார். **இயேசு கிறிஸ்துவை பரலோகத்தில் கண்டதால் அவரிடமிருந்த அந்த மன்னிக்கும் மாண்பை ஸ்தேவான்** பெற்றிருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

ஸ்தேவான்மீது **கல்லெறிந்தவர்களை** ஸ்தேவானால் **மன்னித்திட முடிந்தது. திருச்சபையும் மன்னிக்கவேண்டிருந்தது,** உங்களுக்கு **அநியாயமாக நடந்த** வேதனைக்குரிய விஷயங்களை கர்த்தர் அறிவார்.

ஒருவேளை திருச்சபைகளை – ஊழியங்களை எதிர்த்து துன்புறுத்தி கொலைசெய்யும் (இந்தியாவில் RSS பஜ்ரங்தல், BJP, போன்ற காவி இயக்கங்களினால் சபைகள் நொருக்கப்பட்டு, ஊழியர்களை சிறையில் தள்ளி கொடுமைப்படுத்துபவர்களை கிறிஸ்தவர்ளாகிய நம்மால் மன்னிக்க முடிகிறதா? உங்கள்மேல் அநியாயமாய் பழி சுமத்தினால் சோர்ந்து போகாதீர்கள். இப்படிப்பட்ட அநியாயங்கள் கிறிஸ்தவ வீடுகளில் உள்ள மாமியார், மருமகள், கணவன், மனைவி, உறவினர் ஆகியவர்களால்கூட சிலர் துன்பம் நீங்கள் அனுபவித்திருப்பீர்கள். ஆகவே எல்லாவற்றையும் தேவனே பார்த்துக்கொள்வார். எனவே ஸ்தேவான் மரிக்கும் முன் தாழ்ந்து பணிந்து தேவனைக்தொழுதுகொண்டு **“கர்த்தராகிய இயேசுவே,** என் **ஆவியை ஏற்றுக்கொள்ளும்”** என்றார் ஸ்தேவான்.

இன்று நம்மை துன்புறுத்துபவர்களையும் **நமக்கு தீமை செய்தவர்களையும்** நாம் என்ன செய்யவேண்டும் ? அவர்களை **சபிக்க** வேண்டுமா? அல்லது **பழிவாங்க** வேண்டுமா? அன்று அன்றைய சபை செய்தது என்ன ? **சபை ஜெபித்தது.** நாமும் ஜெபிக்க வேண்டும். **நாம் சபிக்க கூடாது.** 21ம் நூற்றாண்டு திருச்சபையைச் சேர்ந்த நாம் **ஸ்தேவானைப்போல்** மன்னிக்கும் பண்பைப் பெறவேண்டும். மன்னிக்கும் செயல் எளிதானதே.

ஒருவனுக்கும் **தீமைக்கு தீமை** செய்யாதிருங்கள், எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களலானமட்டும் **எல்லா மனுஷரோடும்** சமாதானமாயிருங்கள்.

பிரியமானவர்களே, **பழிவாங்குதல் எனக்குறியது, நானே பதிற்செய்வேன்** என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், **நீங்கள் பழிவாங்காமல்**

**கோபாக்கினைக்கு இடங்கொடாதிருங்கள், நீ திமையினாலே வெல்லப்படாமல், "திமையை நன்மையினாலே வெல்லு"** (ரோமர் 12:17-20) என்று **பவுல் ரோமருக்கு** எழுதிய நிருபத்தில் இப்படிப்பட்ட ஆலோசனையை தந்துள்ளார்.

அன்று அங்கு கூடியிருந்த எருசலேம் மக்களுக்குமுன் ஸ்தேவான் உலகம் தோன்றியது முதல் இயேசு சிலுவையில் அறையப்பட்டதுவரை சம்பவித்ததை கூறி முத்தவுடன் அவர்கள் உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் **தங்கள் காதுகளை** அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து அவனை நகரத்துக்கு புறம்பே தள்ளி **அவனைக் கல்லேறிந்தார்கள்.** கல் எரிந்தவர்ளோடு நின்ற **சாட்சிக்காரர்** தங்கள் **வஸ்திரங்களைக்** கழற்றி **சவுல்** என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய **பாதத்தினருகே வைத்தார்கள்.** அப்பொழுது ஸ்தேவான் உயிர்பேகும் கடைசி நிமிடத்தில் கர்த்தராகிய **இயேசுவே,** என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று **கூறி கர்த்தரை தொழுதுகொள்ளுகையில்,** மேலும் அவன்மேல் **கல்லெறிந்தார்கள்,** அவனோ முழங்காற்படியிட்டு **ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும்** என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி மரித்துப்போனான். **இதைபோன்ற மன்னிப்பை உங்களால் தர முடியுமா ?**

இந்த நூற்றாண்டில் வாழும் நாமும் **பிறரை மன்னிப்பதற்கு அநேக காரியங்கள்** உள்ளன. அவற்றை நாம் அலட்சியமாக கருதக்கூடாது. அவற்றை தேவனுடைய கரத்தில் ஒப்படைக்கும்போது உங்களுக்கு விரோதமாதமாக எழும்பியவர்களை அவர் பார்த்துக் கொள்வார். கிறிஸ்தவ மார்கத்தில் மிகச் சிறந்த ஒரு பண்பு **மன்னிப்பதாகும்.** நாம் மற்றவர்களை **மன்னிக்கும்பொழுது** அக்காரியத்தை தேவனிடத்தில் கொடுத்துவிடுகிறோம். அப்பண்பை நாம் ஒளித்து வைக்கக்கூடாது.

## 2) ஏற்றுக்கொள்ளுதல் – அனனியா

ஆதி சபையின் வல்லமை நமக்கு தேவை எனில் **நம்மிடம் வரும் மக்கள்** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைக் காட்டி தம் வாழ்வில் **மாற்றத்தை வெளிப்படுத்தும் பொழுது** அவர்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலரின் நடபடிகள் புஸ்தகத்தில் ஸ்தேவானைப் போன்று மன்னிக்கும் மான்பை பெற்றிருந்த **அனனியா** என்ற சீடன் **தமஸ்குவில்** இருந்தான்.

அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி, **அனனியாவே** என்றார். அவன் ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். அப்பொழுது கர்த்தர், நீ எழுந்து **நேர்தெரு என்னப்பட்ட**

**தெருவுக்கப்போய்** யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய **சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு, அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்**, **அப்படி அவன் ஜெபம்** பண்ணிக்கொண்டிருக்கும்போது **அனனியா** என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும் **தான் பார்வையடையும்படி** தன்மேல் கைவைக்கவும் அவன் **தரிசனங்கண்டான்** என்றார். (அப்.9:10-12)

திருச்சபையை **துன்புறுத்திய** சவுல், தமஸ்குவுக்கு செல்லும் வழியில் ஆச்சரியமான விதத்தில் ஆண்டராகிய **இயேசு கிறிஸ்துவை சந்தித்தான்**. அவர் தமஸ்குவுக்குச் சென்ற பின்னர் தேவன் **தம்முடைய திட்டத்தை பவுல் மூலமாக** வெளிப்படுத்தும்முன்பு **அனனியாவைப்** சவுலுக்காக பயன்படுத்துகின்றார்.

இங்கே ஆண்டவரிடமிருந்து அனனியாவுக்கு தெளிவான ஒரு உத்தரவு வருகிறது. **அனனியா** ஒரு சீடன். **இயேசு கிறிஸ்துவை** பின்பற்றுபவன். அவன் தர்சு பட்டணத்தானாகிய **சவுலைப்**பற்றி நன்கு அறிந்திருந்தான். அதனால் அனனியா ஆண்டவரிடம், **ஆண்டவரே இந்த மனுஷன்** எருசலேமிலுள்ள **உம்முடை**ய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ **பொல்லாங்குகளைச்** செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப் பட்டிருக்கிறேன். இங்கேயும் **உம்முடைய நாமத்தை** தொழுதுகொள்ளுகிற **யாவரையுங்கட்டும்படி** அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே. என்றான், (அப் 9:13-14)

நான் இதை எழுதுகிற **அனனியாவை** ஆதரிக்கிறேன். தேவனிடம் அவன் **தன் மனதிலுள்ளதைக்** அப்படியே கூறுகின்றான். எனினும் **இயேசு கிறிஸ்து** தனது வார்த்தையினிமித்தம் கிறிஸ்தவர்களை துன்புறுத்திய **சவுலை** ஏற்றுக் கொள்ளும்படி தேவன் கூறுகிறார். **அனனியாவும் சவுலை மன்னித்து ஏற்றுக்கெள்ளக்கூடிய மனப் பான்மையைக்** காண்பிக்கவேண்டுமென்றே **தேவன் அனனியாவிடம்** எதிர்பார்த்தார்.

சவுல் **தமஸ்கு திருச்சபைக்கு** வந்து, அவர்கள் முன்பாக **பாவ அறிக்கை செய்து** போதகர்களிடம் மற்ற ஆவிக்குரிய விவரங்களை அவர் கற்றுக்கொண்ட பின்பு, அதன்பின் நாம் **சவுலை** போய் சந்திப்போம் என **அனனியா** எண்ணவில்லை. உடனடியாக சவுலை மன்னித்து அனனியா தேவனுக்கு கீழ்ப்படிந்தார்.

**புரிந்து கொள்ளுவதைவிட கீழ்ப்படிதலை அனனியாவிடமிருந்து தேவன் எதிர்பார்த்தார்.** இன்று **நம்மிடமும் அதையே தேவன் எதிர்பார்க்கிறார்**. நாம் அவருக்கு

கீழ்படியும்பொழுது தமது கிருபையினால் அவரது திட்டத்தை அறிந்துகொள்ளும் அறிவைத் தேவன் தருவார்.

கர்த்தர் அனனியாவிடம், நீ போ, அவன் **புற ஜாதிகளுக்கும்,** ராஜாக்களுக்கும் **இஸ்ரவேல் புத்திரருக்கும்** என்னுடைய நாமத்தை **அறிவிக்கிறதற்காக** நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். **அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்கு காண்பிப்பேன் என்றார்**. (அப். 9:15,16) இங்கு **சவுலைப்பற்றிய** தம்முடைய திட்டததை **அனனியாவிடம்** தேவன் வெளிப்படுத்தினார்.

அப்பொழுது அனனியா போய், ஆண்டவர் கூறியபடி அந்த வீட்டுக்குள் பிரவேசித்து **சவுலின்மேல்** கையை வைத்து **சகோதரனாகிய சவுலே** நீ வந்த வழியிலே உனக்கு தரிசனமான **இயேசுவாகிய கர்த்தர்,. நீ பார்வையடையும்** படிக்கும் **பரிசுத்தாவியினாலே** நிரப்படும்படிக்கும் **என்னை அனுப்பினார்.** என்றான். (வச. 9) இதுவே **இந்த புத்தகத்தில்** காணப்படும் **முக்கியமான வசனம்.**

சவுலின் அனைத்து காரியங்களையும் **அனனியாவை**விட **கர்த்தர் நன்கு அறிந்திருந்தார்.**

**அனனியாவின் கீழ்ப்படிதலின்** காரணமாக, சவுல் தனது வாழ்வில் **ஒரு மாற்றத்தைக் கண்டுகொண்டார்.** இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் சவுல் ஒரு **புது சிருஷ்டியாக** மாறிவிட்டார். எனவேதான் **அனனியா** சவுலை **இப்பொழுது நீ என் சகோதரன்** என்று அழைக்கிறார்.

பிரியமானவர்களே, இந்த 21ம் நூற்றாண்டில், மாற்றம்பெற்று **திருச்சபைக்கு வரும்** மக்கள் நம்மைபோல் இல்லாவிட்டாலும் நம்மைபோன்று சிந்திக்காவிட்டாலும், தேவனுடைய வார்த்தைகளை அறிந்திருக்காவிட்டாலும் **அவர்களும் நம்மில் ஒருவரே.**

**ஆதி திருச்சபையினரைப் போல வல்லமை வேண்டுமெனில்** சகோதரரே வாருங்கள் **எம்முடன் ஐக்கியம் கொள்ளுங்கள்.** என்று கூறுவது **நமது கடமை.** கர்த்தருக்குள் இன்றே நமக்கு தீமை செய்தவர்களையும் அநியாயம் செய்தவர்களையும் **நாம் மன்னிப்போம் !** அவர்களுக்காக ஜெபிப்போம் !

# கேளுங்க சொல்கிறோம் ?

(SELECTED)

திரு. **த. ஆத்மசொரூபன்,** சென்னை

**கே: தனிமனித உறவு, முதியோரைக் கனம் பண்ணுதல் மற்றும் பிறரிடம் காணும் மாதிரிகளைப் பின்பற்றுவது ஆகியவைகள் தற்காலத்தில் வெகுவாகக் குறைந்துகொண்டே வருகின்றன என்கிறார்களே! இது உண்மையா? எப்படி சீர் செய்வது?**

## தலைமுறைகளின் விதங்கள்

**பதில்**: காலத்துக்கேற்ற கேள்விகளைக் கேட்டிருக்கிறீர்கள். 2010 ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்தவர்களை **'ஆல்ஃபா** தலைமுறை'(Alpha Gen) என்று அழைக்கிறார்கள். முதன்முதலில் இப்பெயரை அறிமுகப்படுத்தியவர் மார்க் மெக்ரிண்டல் என்னும் **ஆஸ்திரேலியாவைச்** சேர்ந்த சமூக ஆய்வாளர் ஆவார். ஆஸ்திரேலியாவின் தலைசிறந்த சமூக ஆய்வாளரான இவர் புள்ளியியல் நேர்த்திக்கான தேசிய விருது பெற்றவராவார். https: //mccrindle.com.au/insights/blog/gen-alpha-defined/

பொதுவாகவே **காலத்தை சமூக அமைப்பின்** அடிப்படையில் பிரித்து ஒவ்வொருவிதமான பெயரிட்டிருக்கிறார்கள். சுருக்கமாக,

1925 முதல் 1945 வரை பிறந்தவர்களை **'அமைதித் தலைமுறை'**(Silent Generation) என்றும்

1946 முதல் 1964 வரை பிறந்தவர்களை **'குழந்தை சுமப்போர் தலைமுறை'** (Baby Boomer Generation) என்றும்,

1965 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை பிறந்தவர்கள் **'எக்ஸ் தலைமுறை'** (Generation X-Baby bust) என்றும் அழைத்தார்கள்.

1981 முதல் 1996 வரை பிறந்தவர்களை **'மில்லென்னியல்ஸ்'** (Millennials) என்றும்,

1997 முதல் 2009 வரை பிறந்தவர்களை **'இசட் தலைமுறை'** (Gen Z ) என்றும் குறிப்பிடுகிறார்கள். https: //www.careerplanner.com/career-articles/generations.cfm

எக்காலத்தில் பிறந்திருந்தாலும், **குழந்தைப்** பருவம், **வாலிபப்** பருவம், **நடுமை** மற்றும் முதுமை ஆகியவை பருவங்கள் **மாறப் போவதில்லை.** பிறக்கும் ஒவ்வொருவரும் இந்நிலைகளைக் கடந்துதான் ஆக வேண்டும். இக்காலகட்டங்களில் **நாம் எப்படி வளர்கிறோம்** என்பதைப் பொறுத்துதான் உறவுகள் அமையும், அதன் அடிப்படையில்தான் **முதியோரைக் கனம் பண்ணுதல்** மற்றும் **பிறரின் மாதிரிகளைப் பின்பற்றி வாழ்தல்** ஆகியவை அமைகின்றன.

தலைமுறை மாற்றங்களின் தாக்கத்தினால், நம்மை விட வயதில் குறைந்தவர்களாயின் **இப்போதைய அவர்களின் பேச்சு,** அவர்களின் **பழக்க வழக்கங்கள்** மற்றும் **நடத்தைகளைக்** காணும்போது **அதிர்ச்சியடைகிறோம்.** உடனே, **'அந்தக் காலத்தில் நாங்களெல்லாம் இப்படிச் செய்ய மாட்டோம்: காலம் கெட்டுப் போய் விட்டது'** என்று கூறி அங்கலாய்க்க ஆரம்பித்து விடுகிறோம்.

இப்போதைய நவீன காலத்தில் **இரண்டு கை கூப்பி** நம்மைவிடப் பெரியவர்களுக்கு **வணக்கம்** கூறுவது குறைந்துவிட்டது. இப்போது **ஒரு கையால் வாழ்த்துவதும்,** அதிலிருந்து மாறி, ' **ஹலோ** அங்கிள், **ஹலோ** ஆன்ட்டி' என்றானதும் பின்னர் '**ஹை** அங்கிள், **ஹை** ஆன்ட்டி' என்று கூறுவதுதான் தற்போது நடை முறையிலிருக்கிறது. வயதில் மூத்த சிலருக்கு அது **அதிர்ச்சியைக்** கொடுத்தாலும் நாமும் **தலைமுறை மாற்றங்களுடன்** இணங்கி **வாழப் பழகிவிட்டோம்.** இம்மாற்றங்களால், **இளையவர்கள் பெரியவர்கள்** மீதுள்ள மரியாதையை குறைத்து விட்டார்கள் என்று எண்ண வேண்டாம். அவர்கள் நம் வாழ்வைக் கண்டு நம்மை உயர்வாக மதிக்கிறார்கள். அதே நேரத்தில் குடும்பத்திலும், பணியிடத்திலும், ஐக்கியத்திலும் சமுதாயத்திலும் நம்முடைய தவறான முன்மாதிரியை நம்மில் அவர்கள் கண்டால், உடனே அவர்கள் **இரண்டு கைகளையும்** கூப்பி நம்மை வணங்கினாலும் அதை பார்க்கும்போது நம் உள்ளத்துக்குள் நம்மைக் குறித்த வேறு விதமான தாக்கத்தையே ஏற்படுத்துகிறோம்!

E® k B] ¼é ¼B Ö«âEÂï ©Ãâ¦ Î ò åÃì **தன் தூய வாழ்வின்** மூலம் மற்றவர்களுடைய வாழ்வில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகிறார். அவரைக் காண்பவர்களும் அவரோடு உறவிலிருப்பவர்களும் அவரை எல்லா வயதில் உள்ளவர்களும் அவரை நேரில் காணும்போது **நிச்சயமாகக் கனம் பண்ணுவார்கள்;** மேலும் அவருடைய மாதிரியைப் பின்பற்றகூட அவர்கள் விரும்புவார்கள். **இரட்சிக்கப்படாத நபர்** எவ்வளவு உயர்ந்த பொறுப்பிலிருந்தாலும் அவரைக் காணும் **இளையோர்,** அவர் வகிக்கும் **பதவி** மற்றும் **பொறுப்புகாக** மட்டும் **அவரை மதிப்பார்கள்.** ஆனால் உள்ளத்தில் அவர்களை இகழ்வார்கள். **எனவே, என் வயதுக்காக ஒருவர் என்னை மதிக்க வேண்டும்**

**என்பதைவிட கிறிஸ்துவுக்குள்ளான என் வாழ்வைக் கண்டு மதிக்கவும் என் வாழ்வைப் பின்பற்ற வேண்டும் என எண்ணவும் வேண்டும் என்பதே சிறந்தது.**

அப்போஸ்தலனாகிய தூய பவுல், எபேசியர் 6:1-4 வரையுள்ள வசனங்களில் **பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும்** ஆலோசனை வழங்கியிருக்கிறார். அந்த ஆலோசனைகள் **பெரியோர்** மற்றும் **சிறியோருக்கான** எந்த உறவுக்கும் அது பொருந்தும் என எண்ணுகிறேன். பவுல் **பிள்ளைகளைப்** பார்த்து, **கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்** என்று கூறியிருக்கிறார். **பிள்ளைகள்** கண்டிப்பாகத் தங்களைவிட வயதில், அந்தஸ்தில் பெரியவர்களுக்குக் கீழ்ப்படிதலின் அவசியத்தை பவுல் வலியுறுத்துகிறார். ஆனால், எந்தப் பெற்றோரும் (அல்லது வயதில் மூத்த எவரும்) **தவறானவைகளுக்குத்** தங்கள் பிள்ளைகளை **கீழ்ப்படியும்படி** எதிர்பார்க்கக் கூடாது. அது போலவே **பெற்றோரும்** (பெரியோரும்) **பிள்ளைகளைக் கோபப்படுத்தக்கூடாது** (எரிச்சல் மூட்டக்கூடாது) என்றும் பவுல் கூறுகிறார்.

எனவே **சீரான உறவுகள்** முதியோரைக் கனம் பண்ணுதல் மற்றும் **சிறந்த மாதிரிகளைப்** பின்பற்றுதல் ஆகியவை **வெளித் தோற்றத்தில்,** நாம் எதிர்பார்க்கும் விதத்தில் நடைபெற வேண்டும் என்று மற்றவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. அவை நம **உள்ளான வாழ்வில்** நாம் பெற்றிருக்கும் **மாற்றத்தின் தாக்கமாகவே** இருக்க வேண்டும். இப்போது **அலைபேசி** உட்பட நாம் பயன்படுத்தும் **தொடர்பு சாதனங்கள்** மற்றும் **சமூக ஊடகங்கள்** ஒருவருக்கொருவர் இடையேயுள்ள **உறவுகளில்** நெருக்கம் ஏற்படாமல் தடுக்கின்றன; மேலும் உறவுகளில் **விரிசலையும்** ஏற்படுத்துகின்றன. நிச்சயமாக இவைகளில் கவனமாயிருக்கவும், மனித உறவுகளின் மேன்மையை நன்றாக உணரவும் **நம் பிள்ளைகளுக்கு** நாம்தான் கற்றுக் கொடுக்க வேண்டும். **உறவுகள், கனம் பண்ணுதல் மற்றும் மாதிரிகளைப் பின்பற்றுதல் ஆகியவைகள் மிகவும் குறைந்து ஆபத்தான நிலைக்குச் சென்று விட்டதோ என அச்சப்படவும் வேண்டாம்.**

**வயதில் சிறியவர்களும்** யோபு 12:12ல் கூறப்பட்டுள்ளது போல, **"முதியோரிடத்தில் ஞானமும் வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே"** என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நிச்சயமாக, **முதியோரின் ஞானமும் ஆலோசனைகளும்** உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.

நாம் கிறிஸ்துவின் **சாயலைத் தரித்து** வாழ்வோம்! அப்போது இவைகளெல்லாம் தானே நடைபெறும்!

" A youth that does not cultivate friendship with the elderly is like a tree without roots"

\- A central - African proverb

**ஜாமக்காரன் :-** 13ம் பக்கத்தில் வாசித்ததைபோல நவீன மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் இக்காலகட்டத்தில் நம் பிள்ளைகளிடத்தில் மற்றவர்களை மதிக்கவேண்டும். குறிப்பாக பெரியவர்களுக்கு, ஊழியக்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை கொடுக்கவேண்டும் என்பதை வீட்டில் நம் பிள்ளைகளுக்கு நம் வாழ்கையின் மூலமும். வேத வசனத்தின் அடிப்படையிலும் நாம் அவர்களுக்கு விளக்கிக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட ஊரில மெத்த படித்தவர்கள் நிறைந்த வசதியான குடும்பத்துக்கு என்னை அழைத்துப்போனார்கள். அந்த வீட்டு குடும்பத்தினர்தான் நான் தங்கியிருந்த இடத்துக்கு காரில் வந்து என்னை தங்கள் வீட்டுக்கு மதிய உணவுக்காக அழைத்துப்போனார்கள். வீட்டில் நுழைந்தவுடன் வட இந்திய ஆங்கில பள்ளியில் ஹாஸ்டலில் தங்கி படிக்கும் பிள்ளைகள் விடுமுறையில் பெற்றோர் வீட்டுக்கு வந்திருந்தனர். அவர்கள் +2 படிக்கும் பிள்ளைகள் மொபைல் வைத்து ஏதோ நோண்டிக்கொண்டிருந்தனர். அப்போது நான் காரிலிருந்து இறங்கி வருவதற்குள் அந்த வீட்டுக்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்து என்னை வரவேற்கிறார்கள். பிள்ளைகள் சோபாவில் உட்கார்ந்தபடியே மொபைலில் விளையாடிக்கொண்டிருந்தனர். பெற்றோர் கோபப்பட்டு பிள்ளைகளின் பெயரை சொல்லி எழுந்திருங்கள். டாக்டர் அங்கிளுக்கு வணக்கம் சொல்லுங்கள் என்றார்கள். உடனே அவர்கள் ஹாய் அங்கிள் என்று குனிந்துகொண்டே கூறினார்கள். அவர்களின் தகப்பனாருக்கு மிகவும் கோபம் வந்தது. ஒரு பெரிய ஊழியக்காரர் நம் வீட்டுக்கு வந்திருக்கிறார். நான் முன்பே சொன்னேன். எழுந்து நின்று ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும் என்றேனே அறிவில்லையா ? என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ? டீ பாயிலிருந்து **கால்களை இறக்கி** எழுந்து நில் என்றார். ஆனால் பிள்ளைகளுக்கு பெற்றோரைவிட கோபம் வந்தது. ‘‘டாட்’’ என்னை ஏன் எழுந்திருக்க சொல்கிறீர்கள். நான்தான் ஹாய் அங்கில் சொல்லிவிட்டேனே என்றார்கள்.

சரி **கால்களையாவது** கீழே இறக்கு என்றார்கள். அதற்கு அவர்கள் டாட் எனக்கு இப்படி **உட்கார்வதுதான் வசதி,** என்னை கட்டாயப்படுத்தாதீர்கள் என்றார்கள்.

பெற்றோருக்கு பெருத்த அவமானமாய் போயிற்று. நான் அவர்களிடம் சின்ன பிள்ளைகள் அவர்களை திட்டாதீர்கள், நான் மற்ற சோபாவில் உட்கார்ந்து கொள்கிறேன் என்றேன். இத்தனைக்கும் பெற்றோர் மிஷனரி ஜெப கூடுகை நடத்துபவர்கள். வாலிப பிள்ளைகளுக்கு சபையில் ஆலோசனை கூட்டம் நடத்துபவர்கள்.

சிறு வயதிலிருந்தே ஹாஸ்டலில் பிள்ளைகள் தங்கி படித்து வந்ததால் பெற்றோர் தங்கள் பிள்ளைகள தங்களோடு கலியாணத்துக்கோ மற்ற குடும்பங்களின் விசேஷத்துக்கோ


அழைத்து சென்று பழக்கப்படுத்தவில்லை. மரியாதையின் மேன்மையை, அதன் அர்த்தத்தை விளக்கிகூற தவறிவிட்டனர். இந்தியாவில் வாழ்ந்துகொண்டே **பெரியவர்கள்,** ஊழியர்கள் வரும்போது **கால்களை** அவர்களுக்குமுன் நீட்டுவது மரியாதை இல்லை. அது நாகரீகம் அல்ல என்பதை பெற்றோர் சொல்லி கொடுக்கவில்லை. செல்லமாக வளர்த்துவிட்டனர். மேலும் பிரசித்திபெற்ற ஆங்கில படிப்பு சொல்லிக்கொடுக்கும் ஆங்கில பள்ளியில் படிப்பதால் அவர்களுக்கு தமிழில் பேசக்கூட இயலவில்லை, வீட்டில் எல்லாரும் ஆங்கிலத்தில்தான் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள்.

ஆலய ஞாயிறு பள்ளிக்கு அந்த பிள்ளைகள் செல்வதில்லை. ஆகவே **ஆவிக்குரிய** மரியாதை, நாகரீகம் எப்படி வரும்? வேத புத்தகத்தின் சம்பவங்களை **ஆபிரகாமின்** மரியாதை **ஈசாக்கின்** மரியாதை, **யாக்கோபின்** மரியாதை ஆகியவைகளை அந்த பிள்ளைகளுக்கு விளக்கி சொல்லி கொடுக்கவில்லை. அப்படி சொல்லி கொடுத்திருந்தால் ஆவிக்குரிய பயம் பிள்ளைகளுக்கு நிச்சயம் உண்டாகும். பெற்றோர்கள் ஊழியர்களுக்கு காட்டும் மரியாதையின் அர்த்தத்தையாவது தன் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்திருக்கலாமே! இந்த நிலையில் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவிடம் ஜெபிக்க வேண்டும் என்ற ஆசையே இருக்காது. வேத புத்தக வாசிப்பு இவர்களுக்க அறவே பிடிக்காது.

நிலைமை தலைக்குமேல் போய்விட்டது. இவர்கள் படித்து வேலைக்கு போகும்போதுதான் மரியாதையின் அருமை தெரியும். பள்ளிகூடத்தில் ஆசிரியர் உள்ளே நுழையும்போது எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்களே ! அந்த மரியாதையாவது ஒப்பிட்டு பிள்ளைகளுக்கு சொல்லிகொடுத்து வீட்டுக்கு வரும் பெரியவர்களுக்கு ஊழியர்களுக்கு எப்படி மரியாதை செலுத்த வேண்டும் என்பதை சொல்லி கொடுத்திருக்கலாமே !

இத்தனையும் நடந்த பின் அந்த வீட்டு பெற்றோர், பிள்ளைகள் இரண்டு பேரையும அறைக்குள் அழைத்து சென்று அவர்களிடம் என்ன சொன்னார்களோ ? கொஞ்ஜ நேரத்தில் பிள்ளைகள் இருவரும் **என்னிடத்தில்** வந்து **சாரி அங்கிள்** என்றார்கள். எதற்கு சாரி என்றன், அப்பா **சொல்ல சொன்னார்கள்** என்றார்கள்.

ஜாக்கிறதை ! நவீன உலகம், **கையில் மொபைல்** ஆகயவைகள் பலருடைய வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டது. அப்படிப்பட்டவர்கள் வீட்டில் அவர்கள் தூங்கி எழும் நேரம் மாறிவிட்டது. விடிய விடிய **போர்வைக்குள்** மொபைல் மூலம் **வீடியோ கேம்.** உறங்குவது **விடியற்காலை,** எழுந்து ஸ்கூல் பஸ் பிடிக்க நேரம் கடந்து போவதால் **பல் துளக்காமல்,** பஸ்ஸில் ஏரி வகுப்பறையில் **தூங்கி வழிவது** போன்றவை பிற்கால வாழ்க்கைக்கு பிள்ளைகளுக்கு வாழ்கயைல் முன்னேர வழியில்லாது போகும்.



இந்திய தேசத்துக்கு சுதந்திரம் வாங்கித்தந்த **மகாத்மா காந்தி** அவர்களின் முயற்சிக்காக நாம் நன்றி உள்ளவர்களாக இருப்போம்.

அதே சமயம் **மகாத்மா காந்தியை** துப்பாக்கியால் சுட்டு கொன்ற RSS தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த **கோட்சே** என்பவனுக்கு **சிலை** வைத்து **கோவில்** கட்ட துணிந்த RSS இந்துமத தீவிரவாத இயக்கத்தினருக்காகவும் அவர்களின் துணை இயக்கமான BJP கட்சியினரின் **இந்துத்தவ** கொள்கையினை மக்கள் இனம்கண்டு கொள்ளவும் பண்முக தன்மையுள்ள பல மதங்கள் நிறைந்த **மதசார்பற்ற நாடு** என்ற கொள்கையுள்ள இந்திய மக்களின் **மத சுதந்திரம்** அழிந்து விடாபடியிருக்க இந்தியர்களாகிய நாம் அனைவரும் பாடுபடுவோம். இந்தியாவில் கிறிஸ்தவர்களின், மத சுதந்திரத்தை அழிக்க நினைக்கும் மத தீவிரவாதிகளுக்காக ஜெபிப்போம்.

**OCTOBER 2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.